# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC .110/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-3/PW- 3 | Village: | |
| Name | : சாந்திராணி | Age | :58 |
| Father's/Husband's Name | : ரவிச்சந்திரன் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 11.12.2024**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி. திராவிடசெல்வி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**3ம் எதிரி ஆஜரில் இருந்தார். 1, 2, 4, 5 எதிரிகள் ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது மேல்மருவத்தூரில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அசா1 எனது மகள் ஆவார். அசா2 எனது கணவர் ஆவார். 1ம் எதிரி பிரகாஷ் எனது மருமகன் ஆவார். 2ம் எதிரி மல்லிகா எனது சம்மந்தி ஆவார். 3ம் எதிரி ராஜேஷ் எனது மருமகனின் அண்ணன் ஆவார். 4ம் எதிரி ரம்யா 1ம் எதிரியின் சட்டவிரேதமான மனைவி ஆவார். 5ம் எதிரி வசந்தா 4ம் எதிரியின் தாயார் ஆவார். கடந்த

2013 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் எனது மகளுக்கும் 1ம் எதிரி பிரகாஷ் என்பவருக்கும் கும்பகோணத்தில் சங்கரா திருமண மகாலில் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது எனது மகளுக்கு ஒரு மாருதி சுவிப்ட் கார், 50 பவுன் தங்க நகைகள், சுமார் ரூ.3 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் கொடுக்கப்பட்டது. காரை மட்டும் எங்கள் வீட்டிலேயே விட்டு சென்றுவிட்டார்கள். மற்ற பொருட்கள் 1 முதல் 3 எதிரிகளின் வசம் உள்ளது. அதன் பிறகு கருப்புட்டிசேரியில் 1 மாதமும் அபுதாபியில் அவர் கணவருடன் ஒன்றரை வருடமும் சேர்ந்து வாழ்ந்து வந்தார். ஒருமுறை 1ம் எதிரி இந்தியாவிற்கு வந்து எனது மகளை விட்டுவிட்டு சொல்லாமலேயே அபுதாபிக்கு சென்றுவிட்டார். அதன்பிறகு எனது மகள் அபுதாபி சென்று அவரது கணவருடன் 3 மாதம் வசித்து வந்தார். அதன்பிறகு எனது மகள் கர்ப்பம் அடைந்து இந்தியாவிற்கு வந்தார். அதன்பிறகு எனது மகளுக்கு குழந்தை பிறந்தது . 1ம் எதிரி மருத்துவமனையில் வந்து பார்த்துவிட்டு உடனே சென்றுவிட்டார். அதன்பிறகு 2 மாதங்கள் கழித்து எனது மகளையும் குழந்தையையும் கருப்புட்டிசேரிக்கு அழைத்து வந்து 1ம் எதிரி வீட்டில் விட்டோம். 1ம் எதிரி மீண்டும் எனது மகளை விட்டுவிட்டு அபுதாபிக்கு சென்றுவிட்டார். அதன்பிறகு போன் செய்தாலும் எடுப்பதில்லை. அப்போதே 1ம் எதிரிக்கு 4 ம் எதிரியுடன் தொடர்பு இருந்ததால் எனது மகளை அழைத்து செல்லாமல் இருந்துள்ளார். அதனால் எனது மகளை குழந்தையுடன் அபுதாபிக்கு அனுப்பி வைத்தோம். எனது மகள் அங்கு சென்று 1ம் எதிரியை அவரது அலுவலகத்தில் சந்திந்துள்ளார். ஆனால் 1ம் எதிரி எனது மகளையும் குழந்தையையும் அங்கேயே விட்டுவிட்டு அவர் இந்தியாவிற்கு வந்துவிட்டார். எனது மகள் அன்றைய தினம் இரவே அபுதாபியிலிருந்து கிளம்பி சென்னை வந்துவிட்டார்.

2. அதன்பிறகு மீண்டும் எனது மகள் மற்றும் குழந்தையை 1ம் எதிரி வீட்டிற்கு அனுப்பி வைத்தோம். 2019 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 முதல் 3 எதிரிகள் 4 ம் எதிரி ரம்யாவை தள்ளி

வைக்க வேண்டும் என்றால் ரூ.10 லட்சம் பணம் கொடுக்க வேண்டும் என்றும் அதனால் எனது மகளை அவரது அப்பாவிடமிருந்து ரூ 10 லட்சம் பணம் வாங்கி வருமாறு 1 முதல் 3 எதிரிகள் கேட்டு அடித்துள்ளார்கள். மறுநாள் காலை 4ம் எதிரி ரம்யா மற்றும் 5ம் எதிரி வசந்தா அங்கு வந்து அவர்களும் எனது மகளை அடித்து எனது மகளை வீட்டிலிருந்து வெளியே தள்ளி உள்ளார்கள். எனது மகள் தகவல் சொன்னதின்பேரில் நாங்கள் கும்பகோணத்திற்கு வந்தோம். பிறகு கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எனது மகள் புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2024.12.12 19:02:31 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC .110/2020 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-2/PW- 2 | Village: |
| Name : ரவிச்சந்திரன் | Age :69 |
| Father's/Husband's Name : ராஜேந்திரன் | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 11.12.2024**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி. திராவிடசெல்வி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**3ம் எதிரி ஆஜரில் இருந்தார். 1, 2, 4, 5 எதிரிகள் ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது மேல்மருவத்தூரில் வசித்து வருகிறேன். நான் வட்டாட்சியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். அசா1 எனது மகள் ஆவார். 1ம் எதிரி பிரகாஷ் எனது மருமகன் ஆவார். 2ம் எதிரி மல்லிகா எனது சம்மந்தி ஆவார். 3ம் எதிரி ராஜேஷ் எனது மருமகனின் அண்ணன் ஆவார். 4ம் எதிரி ரம்யா 1ம் எதிரியின் சட்டவிரேதமான மனைவி ஆவார். 5ம் எதிரி வசந்தா 4ம் எதிரியின் தாயார் ஆவார். கடந்த 26.08.2013 ம் தேதி எனது

மகளுக்கும் 1ம் எதிரி பிரகாஷ் என்பவருக்கும் கும்பகோணத்தில் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது எனது மகளுக்கு ஒரு மாருதி சுவிப்ட் கார், 50 பவுன் தங்க நகைகள், சுமார் ரூ.3 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் கொடுக்கப்பட்டது. காரை மட்டும் எங்கள் வீட்டிலேயே விட்டு சென்றுவிட்டார்கள். மற்ற பொருட்கள் 1 முதல் 3 எதிரிகளின் வசம் உள்ளது. எனது மகளுக்கு குழந்தை பிறந்து குழந்தைக்கு காதுகுத்து நடந்தது வரை எந்த பிரச்சனையும் இல்லை. சுமூகமாக நடைபெற்றது. அதன்பிறகு 1ம் எதிரி எனது மகளை அபுதாபிக்கு அழைத்து செல்லாமல் விட்டு சென்றுவிட்டார். போன் செய்தாலும் எடுப்பதில்லை. அதனால் எனது மகளை குழந்தையுடன் அபுதாபிக்கு அனுப்பி வைத்தேன். அவர் அங்கு சென்று 1ம் எதிரியை சந்தித்தபோது ஏன் என்னிடம் சொல்லாமல் இங்கு வந்தாய் என்றும் இங்கேயே இரு என்று சொல்லிவிட்டு அவர் இந்தியாவிற்கு வந்துவிட்டார். நான் ரிட்டன் டிக்கெட் கொடுத்திருந்ததால் அன்றைய தினம் இரவே அபுதாபியிலிருந்து கிளம்பி சென்னை வந்துவிட்டார்.

2. அதன்பிறகு 1ம் எதிரிக்கும் 4ம் எதிரிக்கும் இடையே உள்ள தொடர்பு எங்களுக்கு தெரிய வந்துவிட்டதால் லோகசித்திரன் மூலமாக ரம்யாவை சரிகட்ட வேண்டும் என்றால் ரூ.10 லட்சம் பணம் கொடுக்க வேண்டும் என்றும் அதனால் எனது மகளை என்னிடமிருந்து ரூ 10 லட்சம் பணம் வாங்கி வருமாறு 1 முதல் 3 எதிரிகள் கேட்டுள்ளார்கள். பின்னர் 20.12.2019 ம் தேதி இரவு சுமார் 8 மணியளவில் 1 முதல் 3 எதிரிகள் எனது மகளை அடித்துள்ளார்கள். மறுநாள் காலை 4ம் எதிரி ரம்யா மற்றும் 5ம் எதிரி வசந்தா அங்கு வந்து அவர்களும் எனது மகளை அடித்து எனது மகளை அங்கிருந்து செல்லுமாறு மிரட்டியுள்ளார்கள். எனது மகள் தகவல் சொன்னதின்பேரில் நாங்கள் கும்பகோணத்திற்கு வந்தோம். பிறகு கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எனது மகள் புகார் அளித்தார். அதன்பிறகு

21.05.2021ம் தேதி 1ம் எதிரிக்கும் 4ம் எதிரிக்கும் கும்பகோணம் கேஆர்ஜி மருத்துவமனையில் பெண் குழந்தை பிறந்ததாக தெரிய வந்தது. குழந்தைக்கு மகிழ்தினி என்று பெயர் வைத்துள்ளார்கள். அந்த விவரத்தை ஏற்கனவே வழக்கில் சொல்லவில்லை என்பதால் வழக்கினை மேலும் விசாரிக்க உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டதின்பேரில் போலிசார் மீண்டும் விசாரணை செய்து மேற்படி குழந்தையின் பிறப்பு சான்றிதழ் உள்பட ஆவணங்களை பெற்று கூடுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2024.12.12 19:02:43 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC .110/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-1/PW-1 | Village: | |
| Name | : சுவாதி | Age | :35 |
| Father's/Husband's Name | : பிரகாஷ் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 11.12.2024**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமை காவலர் திருமதி. திராவிடசெல்வி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**3ம் எதிரி ஆஜரில் இருந்தார். 1, 2, 4, 5 எதிரிகள் ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது மேல்மருவத்தூரில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். 1ம் எதிரி பிரகாஷ் எனது கணவர் ஆவார். 2ம் எதிரி மல்லிகா எனது மாமியார் ஆவார். 3ம் எதிரி ராஜேஷ் எனது கணவரின் அண்ணன் ஆவார். 4ம் எதிரி ரம்யாவை சட்டவிரேதமாக திருமணம் செய்துள்ளார். 5ம் எதிரி வசந்தா 4ம் எதிரியின் தாயார் ஆவார். கடந்த 26.08.2013ம் தேதி எனக்கும் 1ம் எதிரி பிரகாஷ் என்பவருக்கும்

கும்பகோணம் ஸ்ரீகாஞ்சி சங்கரா திருமண மகாலில் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது எனது வீட்டாரால் ஒரு மாருதி சுவிப்ட் கார் , 50 பவுன் தங்க நகைகள், சுமார் ரூ.3 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் கொடுக்கப்பட்டது. திருமணத்திற்கு முன்பாக எனது கணவர் அபுதாபியில் வேலை பார்த்து வந்தார். திருமணத்திற்கு பிறகு நானும் எனது கணவரும் 2 ம் எதிரி மற்றும் 3 ம் எதிரி மற்றும் அவரது மனைவியுடன் கூட்டு குடும்பமாக கருப்புட்டிசேரியில் வசித்து வந்தோம். பிறகு 1 மாதம் கழித்து எனது கணவர் அபுதாபிக்கு வேலைக்கு சென்றுவிட்டார். 2013 ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் எனக்கு விசா அனுப்பி அபுதாபிக்கு வர சொன்னார். நான் கிளம்பும்போது 2, 3 எதிரிகள் என்னை போக வேண்டாம் என்று பிரச்சனை செய்தார்கள். அதன் பிறகு நான் அபுதாபிக்கு சென்று சுமார் ஒன்றரை வருடங்கள் எனது கணவருடன் இருந்தேன். அப்போது ஒருமுறை நான் கர்ப்பம் அடைந்து அபார்ஷன் ஆகிவிட்டது. எனது கணவர் அங்கிருக்கும்போது 2, 3 எதிரிகளின் பேச்சை கேட்டுதான் நடந்து கொண்டார். 2 ம் எதிரி அந்த காலகட்டத்தில் விசிட்டிங் விசாவில் அபுதாபிக்கு வந்து 1 மாத காலம் எங்களுடன் ஒரே அறையில் தங்கியிருந்தார். அப்போது 2 ம் எதிரி பிரச்சனை செய்து சம்பாதிக்கும் பணம் அனைத்தும் வாடகைக்கு செல்கிறது என்று கூறி என்னையும் எனது கணவரையும் வீட்டை காலி செய்து இந்தியாவிற்கு அழைத்து வந்துவிட்டார்.

2. இந்தியாவிற்கு வந்த பிறகு எனது கணவர் வீட்டில் 1 மாத காலம் இருந்தேன். அப்போதும் எனது கணவர் 2 ம் எதிரியின் பேச்சை கேட்டுக்கொண்டு என்னுடன் பேசாமல் இருந்தார். அதன் பிறகு எனது கணவருக்கு மஞ்சள்காமாலை இருந்ததாக கூறி என்னை மேல்மருவத்தூரில் உள்ள எனது வீட்டில் விட்டுவிட்டு பிறகு அழைத்து செல்வதாக 1 முதல் 3 எதிரிகள் சொன்னார்கள். அதன்பிறகு எனக்கு தகவல் ஏதும் சொல்லாமல் எனது கணவர் அபுதாபிக்கு சென்றுள்ளார். அந்த விவரம் எனது சித்தப்பா லோகசித்திரன் என்பவர்

மூலமாக எனக்கு தெரிய வந்து எனது கணவருக்கு பலமுறை போன் செய்து பார்த்தும் அவர் போன் எடுக்கவில்லை.

3. அதனால் 2015 ம் ஆண்டு நவம்பர் மாதம் நானே விசா எடுத்துக்கொண்டு அபுதாபிக்கு சென்றேன். அங்கு நானும் எனது கணவரும் ஏற்கனவே தங்கியிருந்த அறை இருந்த கட்டிடத்திற்கு அருகில் இருந்து எனது கணவருக்கு போன் செய்து நான் அபுதாபிக்கு வந்துவிட்டேன் என்று தகவல் சொன்னேன். எனது கணவர் வந்து என்னிடம் பேசிவிட்டு வேறு வீட்டை வாடகைக்கு எடுத்து 3 மாதங்கள் தங்கியிருந்தோம். அப்போது நான் கர்ப்பம் அடைந்ததால் 2016 ம் ஆண்டு ஜனவரி மாதம் எனது கணவர் என்னை தனியாக சென்னை ஏர்போர்ட்டிற்கு அனுப்பி வைத்தார். அதன்பிறகு குழந்தை பிறக்கும் வரை எனது கணவர் என்னிடம் பேசவும் இல்லை என்னை வந்து பார்க்கவும் இல்லை. செப்டம்பர் 2 ம் தேதி செங்கல்பட்டு வெங்கட்ரமணா மருத்துவமனையில் எனக்கு ஆண் குழந்தை பிறந்தது. அந்த தகவலை எனது அப்பா மற்றும் சித்தப்பா எனது கணவருக்கு போன் மூலமாக சொன்னார்கள். அதனால் எனது கணவர் அன்றைய தினம் இரவு மருத்துவமனை வந்து 5 நிமிடம் பார்த்துவிட்டு சென்றுவிட்டார்.

4. அதன்பிறகு 45 நாட்கள் கழித்து நான் எனது கணவர் வீட்டிற்கு சென்றேன். அதிலிருந்து 2 நாட்கள் கழித்து எனது கணவர் மீண்டும் அபுதாபிக்கு சென்றுவிட்டார். என்னையும் அபுதாபிக்கு அழைத்து செல்வதாக கூறினார். ஆனால் அழைத்து செல்லவில்லை. 1 வருடம் கழித்து சென்னை திருவேற்காட்டில் உள்ள கோவிலில் வைத்து எனது மகனுக்கு காதுகுத்தும் விழா நடைபெற்றது. அதற்கு எனது கணவர், மாமியார் மற்றும் அனைவரும் கலந்து கொண்டார்கள். மீண்டும் எனது கணவர் அபுதாபிக்கு சென்றுவிட்டார். 2018 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2, 3 எதிரிகள் தொடர்ந்து என்னிடம் நீ என்னதான் கொண்டு வந்தாய் என்று கேட்டு என்னையும் குழந்தையையும்

பார்த்துகொள்ளவில்லை என்பதால் நான் குழந்தையுடன் மீண்டும் அபுதாபிக்கு சென்று எனது கணவரின் அலுவலகத்திற்கு சென்றேன்.

5. நான் எனது கணவரை சந்தித்து நான் வந்த விவரத்தை வீட்டிற்கு சொல்ல வேண்டாம் என்று என்று சொல்லியும் எனது கணவர் போன் செய்து நான் வந்த விவரத்தை கூறிவிட்டார். அதன்பிறகு என்னை அவரது நண்பர் வீட்டில் விட்டுவிட்டு எனது கணவர் இந்தியாவிற்கு வந்துவிட்டார். அதனால் நான் அவரது நண்பர் மூலமாக அன்றைய தினம் இரவு 2 மணியளவில் டிக்கெட் புக் செய்து சென்னை ஏர்போர்ட்டிற்கு வந்து மேல்மருவத்தூரில் உள்ள எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். எனது சித்தப்பா மறுநாள் எனது கணவரின் வீட்டிற்கு சென்று ஏன் அபுதாபியில் விட்டுவிட்டு வந்தாய் என்று கேட்டதற்கு எனது கணவர் வேலையை ராஜினாமா செய்துவிட்டதாக சொல்லிவிட்டு 4 நாட்களில் மீண்டும் அபுதாபிக்கு சென்றுவிட்டார்.

6. அதன்பிறகு எனது கணவர் கும்பகோணம் நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தார். எனது மாமா அருணகிரிநாதன் என்பவரின் நண்பர் அபுதாபியிலிருந்து போன் செய்து எனது கணவரை வேறு ஒரு பெண்ணுடன் பார்த்ததாக தகவல் கூறியுள்ளார். எனது சித்தப்பாவிற்கு எனது கணவர் வேறு திருமணம் செய்ய இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது. அதனால் 2018 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். அதன்பேரில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அதன் பிறகு 4 ம் எதிரி ரம்யா அபுதாபிக்கு சென்றுள்ளார். அதன்பிறகு எனது கணவர் எனக்கு போன் செய்து தான் மாட்டிக்கொண்டதாகவும் 4 ம் எதிரி ரம்யாவை எப்படியாவது விலக்கிவிட வேண்டும் என்றும் எனது சித்தப்பாவிடம் தகவல் சொல்லுமாறும் சொன்னார். அதன்பேரில் நான் எனது கணவரை வரசொன்னதின்பேரில் இந்தியாவிற்கு வந்து 2019 ம் ஆண்டு நவம்பர் மாதம் வேர் தாக்கல் செய்திருந்த விவாகரத்து வழக்கை வாபஸ்

பெற்றுக் கொண்டார். அதன்பிறகு 1 வாரம் கழித்து எனது கணவர் அழைத்ததின்பேரில் டிசம்பர் மாதம் கருப்புட்டிசேரியில் உள்ள கணவர் வீட்டிற்கு சென்றேன்.

7. அங்கு எனது கணவர் , மாமியார் மற்றும் அவரது அண்ணன் ஆகியோர் என்னிடம் எனது வீட்டிலிருந்து ரூ.10 லட்சம் பணம் வாங்கி கொடுத்தால்தான் 4ம் எதிரி ரம்யாவை விலக்கி வைக்கலாம் என்றும் இல்லாவிட்டால் 4ம் எதிரியை வீட்டிற்கே வரசொல்லி விடுவோம் என்றும் மிரட்டினார்கள். மேலும் 1 முதல் 3 எதிரிகள் என்னை தேவடியா என்றும் எனது கேரக்டரை மோசமாக பேசி திட்டினார்கள். எனது அப்பா வீட்டிலிருந்து என்ன பணம் கொண்டு வந்தாய் என்று கேட்டார்கள். நான் 1 வார காலம்தான் அங்கிருந்தேன். 20.12.2019 ம் தேதி இரவு சுமார் 8 மணியளவில் எனது கணவர் என்னை கன்னத்தில் அறைந்தார். 2ம் எதிரி எனது முடியை பிடித்து இழுத்தார். 3ம் எதிரி கையால் என் முதுகில் அடித்தார். மேலும் மூவரும் என்னிடம் இப்போதே எனது வீட்டிலிருந்து ரூ.10 லட்சம் பணம் வாங்கி வரவேண்டும் என்றும் இல்லை என்றால் நாளைக்கே ரம்யாவை வரவழைத்து கூடவே இருக்க வைப்போம் என்றும் சொன்னார்கள்.

8. நான் உடனே எனது சித்தப்பாவுக்கு போன் செய்து தகவல் சொன்னேன். மறுநாள் 21.12.2019 ம் தேதி காலை சுமார் 10 மணியளவில் 4ம் எதிரி ரம்யா மற்றும் 5ம் எதிரி வசந்தா ஆகியோர் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். எதிரிகள் 5 பேரும் சேர்ந்து என்னை முடியை பிடித்து இழுத்து முதுகில் அடித்து கதவில் இடித்து வீட்டிலிருந்து என்னை வெளியே தள்ளிவிட்டார்கள். பின்னர் எதிரிகள் என்னை பார்த்து நீ இருப்பதனால்தான் பிரச்சனை வருகிறது. நீ இல்லையென்றால் 1ம் எதிரியை 4ம் எதிரியுடன் சேர்ந்து வாழ வைப்போம் என்றும் கொலை செய்து விடுவதாகவும் மிரட்டினார்கள். அப்போது அங்கு வந்த எனது சித்தப்பா என்னை அவரது வீட்டிற்கு அழைத்து சென்றுவிட்டார். அன்றைய தினம் மாலையே கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு சென்றோம். அப்போது

கும்பகோணத்தில் ஏதோ போராட்டம் நடந்து கொண்டிருந்ததால் நாங்கள் தொடர்ந்து பலமுறை காவல் நிலையத்திற்கு சென்றும் காவல் ஆய்வாளர் இல்லாததால் 26.12.2019 ம் தேதி புகார் அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு 2021ம் ஆண்டு எனது கணவருக்கும் 4 ம் எதிரி ரம்யாவுக்கும் கும்பகோணம் கே.ஆர். ஜி மருத்துவமனையில் பெண் குழந்தை பிறந்ததாக எனது சித்தப்பா மூலமாக எனக்கு தகவல் கிடைத்தது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2024.12.12 19:02:58 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**